# நினைவுப்பதிவுகள்




அமரர். வி. ஸ்ரீஸ்கந்தவேள் (பாபு)

உ
சிவமயம்



# அமரர் உயர் திரு. வி. ஸ்ரீஸ்கந்தவேள் (பாபு)

(ஐகோ பிரைவேட் லிமிட்டெட் பங்காளர்)
MANAGING DIRECTOR - AICO (PVT) LIMITED

மலர்வு 22.09.1967 — உதிர்வு 07.09.2000

## திதி வெண்பா

ஆண்டு விக்கிரம ஆவணி மூல நன்னாளில்
ஈண்டு நல் நவமித்திதி அதனில் – ஆண்தகையும்
ஸ்கந்தவேள் பண்பாளன் பூதவுடல் நீத்து
வானுயர் ஸ்கந்தன் பதம் அடைந்த தினம்



# சமர்ப்பணம்

குலமகனாய், திருமகனாய் பாசமிகு புதல்வனாய்,
அன்புசொரியும் சகோதரனாய் பாசமிகு மாமாவாய்,
மாண்புமிகு மருமகனாய்
பண்பான மைத்துனராய், அரவணைக்கும் பேரனாய்
உற்ற நண்பனாய், ஊழியர்க்கு உதவும் கரங்களாய்
சுற்றம் பேணும் உத்தமனாய்,
எங்கள் உள்ளத்தில் குடிகொண்ட தெய்வமே பாபு!
உனது புகழ் என்றும் மணக்கும்.
இத் திருமலரை தங்கள் பாதகமலங்களுக்குக்
காணிக்கையாக்குகின்றோம்.

அன்புடன் ஏற்று அருளுக,

பாசமிகு அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள்,
பெரியப்பா குடும்பம், சித்தப்பாமார்,
சித்திமார், அத்தைமார்,
மாமாக்கள் குடும்பம், மைத்துனர்,
மைத்துனிமார், அம்மம்மா,
மருமக்கள், நண்பர்கள்,
ஊழியர்கள் உற்றார், உறவினர்கள்

# நீங்கா நினைவில்





## மண்ணக வாழ்வும் வரலாறும்

திருமூலர் சுவாமிகளால் சிவபூமி என்று அழைக்கப்பட்டது. ஈழநாடு, அதன் வடபால் சிரமென விளங்குவது யாழ்ப்பாணம். அங்கு பசுமை நிறைந்த கிராமம் இணுவையம்பதி ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார், அவனது தம்பி, நொச்சியோலை முருகன், வைரவர் பெருமான், அம்பிகை என்னும் திருவருள் புரியும் கிராமம் இணுவில். சித்திரத்தேர், வானளாவிய மஞ்சம் வீதியுலா வரும் புண்ணிய பூமி. சைவமும் தமிழும் இரு கண்களாகப் போற்றும் சைவப் பெருமக்கள் வாழும் இக்கிராமம். ஆலய மணியோசை கேட்டதும், மக்கள் துயிலெழுந்து ஆலயம் சென்று எம்பெருமானை வணங்கி உணவருந்துவது அவர்கள் வழக்கம்.

இது இணுவில் மக்களின் பாரம்பரியம் ஆகும். பாவலர், அறிஞர், புலவர் கலைஞர், பண்டிதர், சித்தர்கள், வாழ்ந்த, வாழுகின்ற கிராமம் இதுவாகும். அங்கு, தென்இணுவையில் உயர்குலச் செம்மல் இறைபக்தி மிக்க சுப்பர் பொன்னையாவும் அவரது இல்லத்தரசி சின்னம்மாவும் பெற்ற உத்தம புதல்வன் விவேகானந்தன். அவர் வடலியடைப்பு உயர்வேளாளர் மரபில் பாலசுந்தரத்தின் புதல்வி பேரின்பநாயகி (தேவி) என்பவரை இல்லத்தலைவியாக பெற்றுக் கொண்டார். இருவரும் கல்வியில், பண்பில், ஒழுக்கத்தில் சிறந்தவர்கள். தபாலதிபராகவும், ஆசிரியையாகவும் கடமையாற்றினர். இவர்கள் இல்லறப் பேறாகப் பெற்ற மூத்த புதல்வன் அமரர் ஸ்ரீஸ்கந்தவேள். இவருக்கு உடன் பிறப்பாக ஸ்ரீசங்கரன், ஸ்ரீகஜானன் என்னும் இருபுதல்வர்களையும் ஸ்ரீபங்கயா, ஸ்ரீதாட்சாயினி, ஸ்ரீஜெனனி, ஸ்ரீபவானி என்னும் நான்கு புதல்விகளையும் பெற்ற பேற்றினால் அமரர் தனது சகோதரர்களுடன் பாசமாக வாழ்ந்தார். அமரர் பாபுவை கண்ணை இமைகாப்பது போல் வளர்த்ததோடு கல்வியில் உயர்ந்தநிலை அடையவேண்டும் என்று கருதினார்.

*ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே,*

என்றாள் வீரத்தாய். அதை இலட்சியமாகக் கொண்டனர் பெற்றோர். அதனால் தன் பிள்ளை கல்வியில் உயர்ந்து விளங்க வேண்டும் என்ற ஆசையோடு ஆரம்பப் பாடசாலையைப் பண்டத்தரிப்பு மகளீர் கல்லூரியிலும் யாழ் இந்து ஆரம்பப் பாடசலையிலும், சிரேஷ்ட கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் படித்து முடித்ததோடு விடவில்லை பாரத நாடு சென்று சென்னை மூகாம்பிகா தொழில்நுட்ப கல்லூரியில் உயர் கல்வி கற்றார். பின்பு படிப்பு முடிந்ததும் தாயகம் திரும்பி வந்து LUXU Press முதல்வர் திரு. தவம் அவர்களிடம் அச்சு தொழில்பயிற்சியை திறம்பட கற்றார். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்ற பொன் மொழிக்கிணங்கவும் "தாயிற் சிறந்த கோவிலுமில்லை" என்ற பொன் மொழிக்கிணங்கவும் அவர்களின் விருப்பப்படி AICO (PVT) LTD என்ற நிறுவனத்தை ஆரம்பித்து அதன் நிர்வாக இயக்குனராகவும் இருந்து வள்பிறை

போல் அந்த ஸ்தாபனத்தை திறம்பட வளர்த்தார். அத்துடன் தன் குடும்பத்திற்கு அச்சாணியாக இருந்த அமரர் பாபு இணுவில் துர்க்கா எண்டபிறைசஸ் லிமிட்டட் (Durgha Enterprises Ltd) நிர்வாக உறுப்பினராகவும் விளங்கினார். தன்தங்கை ஸ்ரீ பங்கையாவின் திருமணத்தை பிறந்த கிராமத்திலே விமரிசையாக நடத்தி தோழனாக நின்ற காட்சி எல்லோர் உள்ளத்திலும் மறக்கமுடியாத ஓர் நிகழ்வாகும்.

*மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை*
*என் நோற்றான் கொல் எனும் சொல்.*

என்ற வள்ளுவன் வாக்கிற்குகிணங்கப் பெற்றோர் மகனின் அழகு, ஆற்றல், குடும்பத்தில் கொண்ட அக்கறை கண்டு பெருமிதம் அடையும் நேரம் கண்ணூறு பட்டது போல் அவர் நோய்க்கு ஆளானார். தன்னுடைய உடன் பிறப்புக்கள் 4சகோதரிகள், 2சகோதரர்கள் உயர் நிலைக்கு வரவேண்டும் என்ற கற்பனைகளோடு அவர் எண்ணியிருந்த வேளை இறைவன் தன் வசம் அழைத்து விட்டார்.

இச் செய்தி யாவரையும் உலுக்கியது. என் செய்வது, அவரை வளர்த்த பெற்றோர், அத்தைமார், சித்திமார், சகோதரர்கள் தந்தையின் உறவினர்கள், தாயின் உறவினர்கள் மைத்துனர்கள், ஊழியர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். ஆவணி மாதம் இறைவன் பிட்டுக்கு மண்சுமந்த ஆவணி மூலத்தன்று அன்னார் இறைவனடி சேர்ந்தார் என்பது உண்மை.

அவரது இறுதி ஊர்வலம் ஓர் சோகக் காட்சியாக அமைந்தது. முழு நிலா போன்ற அழகு, ஆண்மை நிறைந்த தோற்றம், முகத்தில் என்றும் புன்முறுவல் யாரைக்கண்டாலும் அன்போடு அழைக்கும் பக்குவம் நல்ல உள்ளம், பிறர்க்கு உதவும் தன்மை, உறவினரைக் கண்டால் செலுத்தும் மரியாதை எல்லாவற்றையும் நினைக்கும் போது அமரர் பாபு எல்லோர் உள்ளத்திலும் ஓவியமாகிவிட்டார்.

*வகுத்தான் வகுத்த வழி அல்லால்*
*கோடி தொகுப்பினும் துய்த்தல் அரிது*

என்றார் வள்ளுவர். செல்வத்தில், உதவியில், பெற்றோரின் அரவணைப்பில் மக்கள் ஆதரவில் நிறைந்து வாழ வேண்டிய அமரர் பாபு எல்லாமே பொய் என்று முருகன் பாதத்தை நண்ணினார் என்றே சொல்லலாம்.

எல்லாமே எப்பவோ முடிந்த முடிவு என்று சொன்னார் யோகர் சுவாமிகள். விதியை வெல்லுதல் அரிது ஆகவே அமரர் பாபு முருகன் பாதங்களை நண்ணி பேரின்பம் அடைவார் என்பது ஊண்மை. அவர் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக.



உ

*திருவருள் மிகு*



*சிவஸ்ரீ*
வை. சோமஸ்கந்தகுருக்கள்
பிரதமகுரு
ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் கோவில்,
இணுவில்.

"ஸ்ரீ இரஞ்சிதம்"
மானிப்பாய் வீதி, இணுவில்.

Sivasri
V. Somaskantha Kurukkal
Chief Priest,
Sri Pararaja Segara Pillaiar Kovil.
Inuvill.

"Sri Ranjitham"
Manipay Road, Inuvil.

## இரங்கலுரை

இறைபக்தியும், இனியபண்புகளும், உரிய ஒழுக்கங்களும் நிறைந்த ஓர் வளமான குடும்பத்தின் பெற்றோர்க்கு தலைமகனாய் பிறந்து நோயின்மை, கல்வி, தனதானியம் அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம், வலி, துணிவு, வாழ் நாள் வெற்றி என்னும் பதினாறு செல்வங்களில் முதன்மையான நோயின்மை என்ற செல்வத்தை மட்டும் இறைவன் ஏனோ வழங்க மறுத்த காரணத்தால் இன்று நம் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி நம்மை விட்டுப் பிரிந்து அமரத்துவம் அடைந்துவிட்டார். ஸ்ரீஸ்கந்தவேள் அவர்கள்.

திரு. விவேகானந்தன் குடும்பத்தார்க்கு வந்த இந்தப் பேரிழப்பை எதனாலும் ஈடுசெய்ய முடியாது அவர்களுக்கு ஆறுதல் சொல்லலாமென்றால் அதற்கு முன் எம்மை ஆறுதல்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் அதுதான் எம்மால் முடிய வில்லை எனவே நாமும் அவர்களோடு சேர்ந்து துயருறுவோம்.

*வை.சோமஸ்கந்த குருக்கள்.*

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
பிரதம சிவாச்சார்யார்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.

15.09.2000

## பிரார்த்தனை உரை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்"

என்னும் குறளுக்கமைய யாழ்ப்பாணத்தில் இணுவையூரில் அண்ணா தொழிலக முகாமையாளர்களில் ஒருவரான பொ. விவேகானந்தன் அவர்கள் வாழ்ந்தார்கள். அவரின் பிள்ளைகளில் ஒருவரான வி. ஸ்ரீஸ்கந்தவேள் அவர்கள் அன்பும், பண்பும் நிறைந்த நன் மகனாய் வாழ்ந்தவர். கடந்த மூன்று வருடங்களாக உடல் நிலை பாதிக்கப்பட்டு பல்வேறு நாடுகளில் சிகிச்சை பெற்றார். அண்மையில் நோயின் கொடூரத்தால் அன்னார் இறைபதம் எய்தியதைக் கேள்வியுற்றேன். சொல்லொணாத் துயரடைந்தேன். வாழவேண்டிய வயதில் காலன் அவர் உயிரை எடுத்துவிட்டான். பிறப்பு இறப்பு எல்லாமே இறைவனின் நியதி அதனை மானிடர் எம்மால் மாற்ற முடியாது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார். மற்றும் உற்றார், உறவினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல அன்னை துர்க்கா தேவியின் பாதங்களை பணிந்து நிறைவு செய்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்



கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர், ***ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்***
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.

## அஞ்சலி உரை

### அமரர். திரு. வி. ஸ்ரீஸ்கந்தவேள் அவர்கள்

இணுவில் அண்ணா நிறுவனத்தினரின் மைந்தனாக விளங்கி வந்தவர் அமரர். ஸ்ரீஸ்கந்தவேள் அவர்கள். இளம் பிராயத்திலேயே புத்திசாதுரியமும் பெரியவர்களை மதிக்கும் பண்பும் கொண்டவராக விளங்கிய இவருக்கு சடுதியாக ஏற்பட்ட பொல்லாத நோயினால் இவ்வுலகை விட்டு மறையவேண்டியநிலை ஏற்பட்டது. இவருடைய தந்தையார். திரு. விவேகானந்தன் அவர்கள் சிறந்த பண்பாளர். சைவசமூகத்துக்கு பேருதவியாக இருப்பவர். தனது அருமை மைந்தனின் மறைவினால் இன்று அவர் சோகத்தில் ஆழ்ந்திருக்கிறார். இத்தகைய நிகழ்வுகள் எம்மத்தியில் அடிக்கடி நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இதனால் பலரும் கண்ணீர் வடித்துக் கொண்டே இருக்கிறார்கள். அமரத்துவமடைந்த ஸ்ரீஸ்கந்தவேள் இணுவில் அண்ணா கோப்பி குடும்பத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தவர். ஆகவே அக்குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து நிற்பதோடு ஸ்ரீஸ்கந்தவேள் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

18.09.2000 தங்கம்மா அப்பாக்குட்டி

*வழிபடுவோம்*

*செல்வன் பாபு செல்வேன் எனச் சொல்லாமல் சென்று விட்டான். கண்ணீர்க் கடலில் அனைவரையும் தவிக்கவிட்டு மறைந்து விட்டார்.*

*நேற்றுப் போல் உள்ளது. சென்னை வந்ததும் என்னுடன் தொடர்பு கொள்வார். காந்தளகம் வருவார். அச்சக நுட்பங்களை அறிய விரும்புவார். என் நண்பர்களிடம் அனுப்புவேன். பழகுவார். பயில்வார். நுட்பங்களைத் தெரிந்து கொள்வார்.*

*நேற்றுப் போல உள்ளது. காலில் வலி என்று வந்தார். சென்னையில் தலைசிறந்த மருத்துவர்களுள் ஒருவர் என் நண்பர். அவரிடம் அழைத்துச் சென்றேன். நோய் மாறிவிடும் என்றார் மருத்துவர். மகிழ்ந்தவர் பாபு மட்டுமல்ல, நானும்.*

*நேற்றுப் போல உள்ளது "எனக்கு நோய் மாறிவிடும். அதை மறந்து தொழிலைப் பார்க்கப் போகின்றேன்" என நம்பிக்கையுடன் கூறியவர் பாபு. எனக்கு நம்பிக்கை ஊட்டியவர் பாபு.*

*இன்றைக்கு அவர் எம்முடன் இல்லை, நேற்று இருந்தவர் இன்று இல்லை. நேற்றுப் பேசியவர் இன்று இல்லை. நேற்று மகிழ்ந்தவர், நம்பிக்கை ஊட்டியவர் இன்று என் நெஞ்சில் நிழலாக மட்டுமே உள்ளார்.*

*பெருமை வேண்டுமாம். புகழ் வேண்டுமாம். அதற்காக, உலகம் இந்தக் கொடுமையை நமக்கு செய்யலாமா? நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற பெருமையைத் தேடிக் கொள்வதற்காகத் தம்பி, பாபுவை நம்மிடம் இருந்து பறித்துக் கொண்டது இவ்வுலகு.*

*நடராஜா அண்ணனுக்கு நான் எவ்வாறு ஆறுதல் சொல்வேன். கண்ணனுக்கு என்னத்தைச் சொல்வேன்.*

*நாள் ஒவ்வொன்றும் உயிர் பறிக்கும் வாள் என்றாலும், இந்த இளமைத் துள்ளலையும் தொழில் வேட்கையையும், கடின உழைப்பையும் வெட்டி வீழ்த்தக் காலனிடம் கடுமையாக வாள் இருந்ததோ! அதனாலன்றோ மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் கடிந்தவர் கடவுள். அக்கடவுளை வழிபடுவோம் - வாழ்வுக்குத் துணை வழிபாடுதான். அதுவும் பாபுவுக்காக வழிபடுவோம்.*

*20.09.2000* *மறவன்புலவு க. சச்சிதானந்தன்*



செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பி.ஏ
"பாலாவி"
மருதனார்மடம்.
இணுவில்.

## செஞ்சொற் செல்வரின் அஞ்சலி உரை

காட்சிக்கு எளியன், கடுஞ்சொல் அறியான், கருணையே வடிவானவன். கந்தவேள் என் செய்வோம். காலன் அருமைந்தனை அழைத்துவிட்டான். இறைபக்தியும் இனிய பண்பும் நிறைந்த உத்தமக் குடும்பத்தில் உதித்த தலைமைந்தர்களில் ஒருவரை நாம் இழந்துவிட்டோம். உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள் அண்ணா நிறுவனத்தினர் ஊர்வாழ்வதற்கு உறவுகள் சீர் பெறுவதற்கு சமூகம் நலம் பெறுவதற்கு பல்துறைப் பணி செய்யும் அண்ணா நிறுவனத்தில் கண்ணூறுபட்டது போல் கந்தவேள் அவர்களின் பிரிவு அமைந்துவிட்டது. சின்னவயதினிலேயே பொறுப்பு மிக்க மைந்தனாக விளங்கி உயர்கல்வி பெறுவதற்காக இந்தியா சென்று கற்றுத் தேறிய விவேகி தொழில் ஸ்தானத்தில் நவீனத்துவங்களைப் புகுத்துவதற்காக இலங்கை அச்சக உருவகச் சபையில் உறுப்பினராகி சர்வதேச ரீதியில் இங்கிலாந்தில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. கண்ணன் அவர்களுடன் கலந்து கொண்டு நாடு திரும்பியவர் கந்தவேள். எத்தனையோ கற்பனைகளோடு அவரை எல்லோரும் எண்ணியிருந்த வேளை இறைவன் தன்வசமாக அழைத்துவிட்டான். அன்பர் கந்தவேளைக் காப்பாற்றுவதற்கு அவரது தாய், தந்தை, உறவினர் செய்த முயற்சி எல்லாம் யான் அறிவேன். ***அமரர். ஸ்ரீஸ்கந்தவேள் அவர்களை*** நான் நேரில் பார்த்து ஆறுதல் சொல்லும் வாய்ப்பை இந்தியாவில் ஆண்டவன் எனக்கு நல்கினான். நோயுற்று இருந்த வேளையிலும் என்னை உபசரிக்க முயன்ற காட்சி என் அகத்தில் நிலைத்து நிற்கிறது. எவருக்குமே தீமை எண்ணாத ஈர நெஞ்சுடைய ஆனந்தன் அண்ணருக்கும் அவரது குடும்பத்தவர்க்கும் இந்நிலை ஏன் ஏற்பட்டது என்பது எல்லோரதும் உள்ளக் குமுறலாகவுள்ளது.

"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
ஒரு பொல்லாப்பும் இல்லை"

என்ற யோகர் சுவாமிகளின் திருவார்த்தையை மனதில் எண்ணி நாம் அமைதி அடைவோம், கந்தவேளின் ஆன்மா சாந்தி பெற பரராச சேகர விநாயகன் திருப்பாதங்களை இறைஞ்சுவோமாக.

ஆறு. திருமுருகன்

# கண்ணீர்க் கடிதம்

உற்ற மகன் பிரிவால்
உள்ளம் நொறுங்கி நிற்கும்....
பெற்றவர்க்கு...., அவனைப்
பெறாதவர் நாம் எழுதுவது....
உள்ளம் துடிக்குதையோ....?
உதிரம் கொதிக்கிறதே....? கண்ணில்
வெள்ளம் வழிகின்றதே.... நெஞ்சில்
வேதனைத் தீ சுடுகின்றதே!
கள்ளமில்லா பிள்ளைதனைக்.
காலன் கவர்ந்தானோ....?
அள்ளி அணைத்த மகன்
அக்கினியில் கலந்தானோ....?
உங்களுக்கு மட்டுமல்ல....
எங்களுக்கும் பிள்ளையவன்
என்பதனால் தானோ எங்கள்
உள்ளம் இன்னும் ஆறவில்லை...
அவன் பேச்சு ஒவ்வொன்றும்
அகக் கண்ணில் வந்து நின்று
அழவைத்து வேதனையில்
ஆழ்த்திடுதே என்ன செய்வோம்...?
கட்டிப் பிடித்து உம்மோடு
கதறியழ முடியவில்லை....
கிட்ட வந்து உம்மை யெல்லாம்
தேற்றிடவும் முடியவில்லை....
நீங்கள்....
பட்ட துயர் நாமறிவோம்....
பிள்ளையவன் பிணிதீர்க்கக்
கொட்டியதும், ஊரெல்லாம்
கொடுத்ததவும் கொஞ்சமல்ல....
எந்தக் குறையுமின்றி
இயன்றவரை செய்து விட்டீர்....
இந்தக் குறை உமக்கு
வந்ததுவும் முன் வினையோ....?
ஏற்க முடியவில்லை.... எமக்கேதும் புரியவில்லை....
ஆற்ற வழி தெரியவில்லை.... அழுகின்றோம்....
என்ன செய்வோம்?

மயிலாப்பூர்,
சென்னை-4.

வேதனையுடன்
தர்மர், தேவி



*ஸ்ரீஸ்கந்தவேளின் ஆத்மா சாந்திக்காக*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இணுவில் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்காக நாம் கேட்டவற்றை கேட்கும் நேரமெல்லாம் தந்து உதவியவர் அண்ணா தொழிலக முதல்வர் திருவாளர் பொ.நடராசாவும் அவரது சகோதரர் திருவாளர் பொ.விவேகானந்தனும் ஆவார். இணுவில் இந்து நம்பிக்கை நிதியத்தில் காப்பாளராக இருந்து அண்ணா தொழிலதிபர் அதிக சேவை செய்கின்றார். அவர் தனது மகன் போல் வளர்த்த பெருமகன் தனது தம்பியின் புதல்வன் ஸ்ரீஸ்கந்தவேள் மறைந்த செய்தி கேட்டு அவரும் அவரது குடும்பத்தாரும் ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருக்கும் வேளையில் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு,
**இணுவில் இந்து நம்பிக்கை நிதியம்**
தலைவர், செயலாளர், சக உறுப்பினர்கள்

* * * * * * * * * * * *

# *வானத்தில் எறித்த நிலா எங்கே?*

திருத்தலம் தென் இணுவை உதித்த செம்மல்
திண்மை பெறு கல்வியிலே நிமிர்ந்து நின்றான்
பாரதத்தில் தொழிற் கல்வி பயின்று வந்து
மாண்புடனே AICO நிறுவனத்தை வளர்த்த மைந்தன்
சிரித்த முகம் செம்மை சேர் தூய உள்ளம்
ஸ்ரீஸ்கந்தவேள் பெயர் கொண்ட பாபு அவன்
திருத்தவமும் சிவனடியைச் சேர்ந்தான் ஆங்கு
திருவடியில் என்றென்றும் இன்பம் காண்பான்.

வானத்தில் எறித்த நிலா எங்கே? எங்கே?
வண்ணமலர் வாடியதும் ஏனோ ஏனோ?
கானத்தின் குயிலும் இங்கே பாடவில்லை
கண்கலங்கி நிற்கின்றோம் சரியோ சொல்லு
ஆண் கன்றைப் பிரிந்த தாய்ப் பசுவைப் போல
தவிக்கின்றோம் நீர் இங்கு வருவது எப்போ?
மான் கூட்டம் பிரிந்ததுவும் மாயம்தானோ
மண்ணில் உம்மை மறந்திடவும் முடியாதையா.

*65/2 ஹம்டன் வீதி,*
*வெள்ளவத்தை*

*திரு. திருமதி. சின்னராசா குடும்பம்*
*இணுவில் தெற்கு, இணுவில்*

# விதியே ! விதியே !! நீ ஜெயிக்கவில்லை !!!

## வேல் அமுதன்

(ஆக்க இலக்கிய படைப்பாளி திருமண ஆலோசகர்)

விதியே ! விதியே ! நீ என்ன செய்துவிட்டாய்?...

நீ படுமோசம் சதி செய்துவிட்டாய் ! எம்மிடமிருந்த விலையுயர்ந்த "பாபு" வாம் மாசுபடா மாணிக்கத்தைப் பறித்து விட்டாய் !

இழக்க முடியாததை இழந்து துடிக்கின்றோம் ; அழுகிறோம் !

ஒரு சகாப்தத்திற்கு மேல் நான் நெருங்கிப் பழகிய ஒருவர் பாபு (அமரர் விவேகானந்தன் சிறீஸ்கந்தவேள்). எனது கடந்த பத்தாண்டுக் காலப் பழக்கத்தில் நான் பாபுபோல் ஒரு சிலரை மாத்திரமே சந்தித்திருக்கிறேன்.

தெய்வீக வசிகரம்
இதழ்களில் மென் புன்னகை
மனித நேயம்
உதவும் சுபாவம்
உரிய இலட்சியங்கள்
சீரிய பழக்கவழக்கங்கள்

இப்படித்தான் பாபு எனக்குத் தோற்றம் தருகிறார் !

பாபு நானறிய எத்தனையோ நற்காரியங்களை ஆற்றியிருக்கிறார். அவற்றின் அத்தாட்சிக்கு ஒன்று - அதுதான் AICO என்ற அருமையான அச்சுப் பதிப்பு நிறுவனம்! தலைநகரின் அச்சுப்பதிப்புத் தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக எழுந்து நிற்கிறது இந்த நிறுவனம்.

AICO சாதாரண நிலையிலிருந்து படிப்படியாக அச்சக அன்பர்களின் உதவியோடு கட்டியெழுப்பிய நிர்மாணி பாபுவே !

பாபுவின் செயற்திறனுக்குப் பட்டியல் போடும் நேரமல்ல, இது !...

ஆனால் !...

ஒன்றை அறுதியிட்டுச் சொல்லிட ஆசைப்படுகின்றேன் !


விதியே ! விதியே ! நீ பாபுவை எம்மிருந்து பறித்துக் கொண்டது உண்மை ! ஆனால், "பாபு" என்ற பசுமையான நினைவை உன்னால் எந்நாளும் எம்மிடமிருந்து பறித்து எடுக்க முடியாது.

நாமிருக்கும் வரை பாபுவின் நினைவிருக்கும் ! நினைவிருக்கும் வரை பாபு என்ற நினைவு, எமது மனக்கோவிலில் மூல விக்கிரகமாக வீற்றிருக்கும் இது, நிச்சயம் !

*வேல் அமுதன் திருமண ஆலோசனையகம்.*
8/3/3 Metro Apartment, 55th Lane, Colombo - 06.
Tel : 599488 Telefax : 074 - 514396 E-mail : amuthan@sltnet.lk

27 செப்ரெம்பர் 2000





# கனிவு மலர் தூவுகின்றேன்

அன்பு முகமும்
அறிவான நல்லொளியும்
இன்ப நெறி காட்டும் இயல்பும்
மாறில்லாப்
பண்பு நூல் கற்றுப்
பலருக்கு வழிகாட்டிய நீ !
விண்ணுலகம் சென்றாயோ வியந்து
அன்புக் குழந்தையாய்
நாம் அரவணைத்த வேளையிலே
கன்னல் மொழி பேசி எம்
இன்னல் களைய வைத்து
சொன்ன வழி தவறாத்
தூயவா நல் பாபுஜீ
மின்னலுறு வேளை தன்னில்
விந்தையாய் எங்கு சென்றாய் ?

சித்தப்பா எனக் கூறி என்
சிந்தை குளிர வைத்த
வித்தகனே பாபு நீ !
விண்ணுலகம் சென்றாலும்
நித்தியமாய் என் மனதில்
நீங்கா நினைவுடனே
உத்தமனாய் வாழ்வாய்
உண்மை நிலையதுவே !

உள்ளக் கவிதைகளை
உன்தனக்கு யான் வடிக்க
தெள்ளிய சிந்தனைகள்
திசை மாறிப் போயினவே
வெள்ளையுள்ளம் படைத்த
மேன்மையுறு பாபு உனக்கு
கள்ளமில்லா நெஞ்சக்
கனிவு மலர் தூவுகின்றேன்.

வி.எஸ். குமாரசுவாமி
றொறன்ரோ (கனடா).

21.09.2000

# காலன் உன்னைக் கவர்ந்ததேன் ?

பிறப்பென்று ஒன்றிருந்தால் இறப்பொன்றிருப்பது நிச்சயம். இருந்தாலும் இளவயதில் இறப்பதென்பது கொடுமையிலும் கொடுமை. பண்பின் சிகரமாய் பாசத்தின் இருப்பிடமாய், ஒழுக்கத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த நீ! சாதிமத பேதமின்றி எம்மோடு ஒன்றாய், நன்றாய் பழகினாயே....! அந்த இனிய நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன். என் நெஞ்சம் விம்மி அழுகிறது. தேற்றுவதற்கு நீ தான் மீண்டும் பிறந்து வர வேண்டும்.

காலத்தால் அழியாத
சிறப்புப் பெற்ற உன்னை
காலன் கவர்ந்ததேனோ !
கலாபூஷணம் கே. ஏ. ஜவாஹர்
(அபூநாளா)

# என் இனிய நண்பா

அமைதிப் பூங்காவாய், அடக்கத்தின் நிழலாய் நிமிர்ந்தாய் ! ஆனால், அமைதியாய் நோயின் கோரப்பிடி உன்னை ஏன் மரணத்திற்குள் அடக்கம் செய்தது.

வாழ்வின் ரம்மியங்களை வரிசையாக அனுபவிக்க வேண்டிய உன்னையா மரணம் வாரி அணைத்தது? அணைந்து போன நேச விளக்கே ! உனக்காக என் கண்ணீர் இங்கு வழிந்தோடுகிறது.

சிநேகிதனே!

உன் ஞாபக பூக்கள் என்றென்றும் என் இதயச் செடியில் பூத்துக் கொண்டே இருக்கும்.

உன் இனிய நண்பன்
டாக்டர். கலைஞர். ஆர்.
ராஜசேகரன்
(செயலாளர். வெள்ளி நிலா கலாலயம்)



# என்று வருவீரோ?

*தலைப்பிள்ளை நீர் இன்று*
*பொறுப்பேற்கும் இவ்வேளை....*
*தலை சாய்ந்து போனீரோ....? எம்மைத்*
*தவிக்க விட்டுச் சென்றீரோ....?*

*என்ன செய்வோம்.....? ஏது செய்வோம்....?*
*உள்ளத்தின் துயரத்தைச் சொல்ல வொரு வார்த்தையில்லை....*

*அன்பு வைத்தோம்.... துன்பமுற்றோம்....*
*ஆசை வைத்தோம்.... மோசம் போனோம்....*
*பரிவு கொண்டோம்.... இன்று.... பிரிவு கண்டோம்....*
*சிரிக்கும் முகம் சிந்தையில் நிற்கின்றது....*

*என்னோடு பகிடிவிட, என்கதை கேட்டுச் சிரிக்க....*
*என் சமையலை இரசித்து, உருசித்துச் சுவைக்க....*
*எங்களோடு உறவாடி மகிழ....*

*என்று வருவீரோ.... பாபு அண்ணா?*

*உன் பிரிவால் துயறும்*
*தங்கை பொபி.*

*மயிலாப்பூர்*
*சென்னை- 4.*

## சகோதரிகள் கண்ணீர் அஞ்சலி

அம்மாவைப் பலமுறையும் அழைத்திடுவாய் அருகிருந்து
அம்மாவும் பாசமாய் உன்பணிகள் செய்து நின்றார்
அம்மாவும் பாபு என்று ஓயாமல் அழைத்திடுவார்
அம்மாவைப் பிரிந்து நீ சென்றதுவும் ஏனோ அண்ணா!

அப்பாதான் எண்ணியது கனவாக முடிந்ததண்ணா
அப்பாவும் அழுதழுது பொலிவிழந்து நிற்கின்றார்
அப்பா தன் சுமையெல்லாம் நீ சுமந்திடுவாய்
என்றிருந்தார் அண்ணா
இப்போது நடந்தது என்ன சோகக்கதை தானே!

## சகோதரர்கள் கண்ணீர் அஞ்சலி

லண்டனில் செய்தி கேட்டு ஓடோடி வந்தோம் அண்ணா
கண்டது என்ன நீ கண்மூடி படுத்திருந்தாய்
அன்புக்கு இலக்கணமாய் இருந்தனையே எமக்கெல்லாம்
மண்ணிலேயே உன் வாழ்வு சோகமயமானதென்ன

மைத்துனர்கள் தம்பிமார் தங்கையர்கள் சூழ்ந்திருக்க
எத்தனையோ பகிடிகளும் கதைகளையும் சொல்லி வைத்தாய்
அத்தனையும் எம் செவியில் ஒலிக்குதண்ணா
ஓயாமல் அத்தனையும் நினைத்துப் பார்த்தோம்
பித்தனாய் ஆகிவிட்டோம் உன் பிரிவால் அண்ணா

வானத்தில் எறித்த நிலா மறைந்தது எங்கே?
வண்ணமலர் வாடியதும் ஏனோ அண்ணா
கானத்தின் குயிலும் இங்கே பாடவில்லை
கண்மணியும் ஒளி இழந்து நிற்பது ஏனோ
ஆண் கன்றைப் பிரிந்த தாய்ப் பசுப் போல
தவிக்கின்றோம் நீர் இங்கு வாறதெப்போ?
மான்கூட்டம் பிரிந்ததும் மாயம் தானோ
மண்ணில் நாம் மடியும் மட்டும் துன்பம் அண்ணா

காலம் எல்லாம் காத்திடுவாய் என்று
கனவு கண்டோம் அண்ணா
காலன் அவன் தந்திரமாய் கவர்ந்து
சென்றான் உன் உயிரை
காலத்தே பயிர் செய்யக் காத்திருந்தாய்
என் செய்வோம் எங்கள் பாவம்
காலம் எல்லாம் உன் பிரிவால்
வாட வைத்ததும் விதிதானே.

* * * * * * * * * * * * *



## *கண்ணே பாபு நீ வருவாயா?*

காலையில் செய்தி கேட்டோம் .... கதறி அழுகின்றோம் ...
ஆலையி கரும்பானோம்.... ஐயோ! நாம் என்ன செய்வோம்....?
கண்மணியே பாபு! கனக்குதடா எம் இதயம்....
எண்ணம் கொதிக்குதடா....(இனி) என்ன நாம் செய்வோமடா?
நாளை விடியும்.... நீ நலம் பெறுவாய் என்றிருந்தோம்....
பொல்லாத நாளும் இன்று வந்ததுவோ.... எங்கள் நம்பிக்கையும் பொய்த்ததுவோ?....
இத்தனை நாள்.... உனக்காக.... இறைவனிடம் கேட்டதெல்லாம்....
அத்தனையும் வீண்தானோ.... எம்மை அழவைத்துச் சென்றாயோ....?
முப்பது ஆண்டுகளாய் முழுநிலவாய் வளர்ந்த உன்னை....
மூன்றாண்டு காலம் ..... பாழும் நோய் வந்து வாட்டியதோ....?
உடல் நோயால் நீ துடிக்க.... உளம் நொந்து நாம் துடித்தோம்
உள்ளுக்குள்ளே அழுது.... வெளியே சிரித்து நின்றோம்....
இனிமேல் அழுவதற்கு எம் கண்ணில் நீரில்லை....
அழுதாலும் துடைப்பதற்கு ஆசை மகன் நீ.... இல்லையே....
பூவாகிக், காயாய், கனிவாய் என்றிருந்தோம்....
புயலொன்று வந்து இளம் பூ உன்னைப் பறித்ததுவோ....?
புயல்வந்து போவதற்குள் பூகம்பம் வந்து உன்னை
அழித்துச் சுவைத்ததுவோ.... அடியோடு சாய்த்ததுவோ....?
சாயாதிருந்தால்.... இன்று நீ.... காயாகிக் கனிந்திருப்பாய்....
சார்ந்திருக்கும் நெஞ்சமெல்லாம் சந்தோஷம் பூத்திருக்கும் ....
துளிர்த்திடுவாய் என்றிருந்தோம்.... துவண்டு விட்டாய் பசுங் கொடியாய்
விழித்தெழுவாய் என நினைத்தோம்.... தூங்கி விட்டாய் நீ ஐயா !
நோயின் வலி பொறுத்தாய்.... பிறர் நோகாமல் மனம் சகித்தாய்....
தாய், தந்தை உளம் புரிந்து தாங்கினாய் வேதனையை....
தத்துவங்கள் சொன்னவனே....! தத்துவமாய்ப் போனாயோ....
இத்தனைநாள் எம்முடனே பழகியதும் இதற்குத் தானோ....?
கண்முன்னே பிள்ளை நீ.... கருகி உடல் நலிய....
கண்டு தினம் நாமெல்லாம் கலங்கி உள்ளம் மெலிந்தோமே....?
கண்ட கண்ட கோயிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டோம்....
என்னென்ன வைத்தியங்கள் எத்தனைதான் செய்து பார்த்தோம்....?
எத்தனையோ செலவு செய்தும் எல்லாமே வீணாச்சே....
இத்தரையில் உன் வாழ்வும் முடிந்ததென்று கதையாச்சோ!
பொறுமையின் சிகரம் நீ.... போதனையின் வடிவம் நீ....
அருமைக் குழந்தை உன் போல் ஆர்வருவார் இனி எமக்கு?
அன்பான பெற்றோர்கள் அருமைச் சகோதரர்கள்....
அயலார் சுற்றம் என்று அன்பில் திளைத்தவன் நீ....
எல்லோரும் உன்பிரிவால்.... ஏங்கி இன்று துடிதுடிக்க....
சொல்லாமல் கொள்ளாமல் போனாயோ.... நீ.... ஐயா!

எத்தனையோ கொடியவர்கள்.... இம் மண்ணில் களித்திருக்க....
ஒன்று மறியாப் பேதை, உன்னை யவன் அழைத்ததென்ன....?
காலன் கொடியவனோ....? அந்தக் கடவுளுக்கும் கருணை இல்லை....
பாழும் விதி இதுவோ.... என்ன பாவம் நாம் செய்தோமோ?
மணக்கோலம் காணவென்று மகிழ்வோடிருந்தோமே....
இக் கோலம் காண வைத்த ஈசன் தான் கொடியவனோ....?
உனக்கென்று வகுத்தவனின் எதிர்கால நலன் கருதி....
உறவைத் தடுத்தாயோ.... உன் கருணையுள்ளம் யார்க்கு வரும்?
முதுமையிலே அப்பனுக்குக் கொள்ளி வைப்பான் பிள்ளை என....
முந்தி விட்டாய்.... நீ...., தந்தை முதுகெலும்பு ஒடிந்ததையா....
ஒரு கோடி கனவுகளை நெஞ்சில் சுமந்த அன்னை....
தெருக் கதவின் வாசலிலே தேடுகின்றாள் உன்னை ஐயா!
அண்ணா ! அண்ணா ! என்று ஆசையுடன் உனையழைத்த
அன்புத் தம்பி, தங்கையரை எப்படித்தான் பிரிந்தாயோ....?
வின்சென்ற், சதீஸ், மனோ, கோவிந்தராஜன்.... என்று
உன் பிரிவு கேட்டு இங்கு கலங்கும் நண்பர் எத்தனை பேர்....?
எல்லோரும்.....
அழுகின்றோம்.... அழுகின்றோம்.... ஆற வழி தெரியவில்லை....
தொழுதும் பயனில்லை.... தொடர்கதைக்கும் முடிவில்லையோ....?
சென்றுவிட்டாய்.... என்கின்றார்.... சிந்தை இதை ஏற்கவில்லை....
என்றோ ஒரு நாள் நீ வந்திடுவாய் என்று நம்பி....

பாயசமும், பால் கஞ்சி, பலகாரம், மிளகு ரசம்
ஆசையுடன் உனக்காக அத்தனையும் செய்துவைத்து,
கிளிமூக்கு மாங்காய், நெல்லிக்காய், மோர்மிளகாய்....
களிப்பாக்கு என்று நீயும் கேட்டதெல்லாம் வாங்கிவைச்சு,

வற்றாத அன்பாலே விழி மேலே விழி வைத்து
கற்பகத்தின் வாசலிலே காத்திருப்போம் வா கண்ணே!

வருவாயா கண்ணே! நீ வராவிட்டால் உனைத்தேடி
ஒரு நாள் நாம் வந்திடுவோம்....

அது வரையில்.......
என்ன செய்வோம்.....?

மயிலாப்பூர்,
சென்னை- 4.

உன் பிரிவால் வாடும்
சித்தப்பா-சித்தி



## *நீதிவேள் பாபு கோவே ! வெஞ்சமர் கொண்டு*
## *காலன் வீழ்த்திட வேளும் வீழ்ந்தோ !*

*நீர்நில வளப்புக்கொண்ட நிறைபதி யாழ்நகரில் பார்புகழ் இணுவில் தெற்கில் பல்கலைக்கழகமென்னும் சீர்புகழ் விவேகானந்தன் சிந்தைசேர் மனையாள்தேவி பேர் இன்ப பொன்பொதி குடும்பம் தன்னில் வேர்மலி விருட்சமென்று வேளிவண் பாபு வென்னும் நேர்மையின் ஆண்மகனாய் நிழல் கொடி படர்ந்தேயாங்கு வார் ஸ்ரீஸ்கந்தவேளாய் வண்ணமாய்ப் பூத்து மண்ணில் கூர்மையினறிவு பெற்றுக் குலமர புயர வாழ்ந்தாய் !*

*கொழும்பு மாநகரிலாங்கே குறிக்கும் AICO எனும் கோவேயென்னும் தொழும் பணி நிறுவகத்தின் தாயபங்காளனாகி எழுமுகா மைத்துவத்தின் இயல் பணிப்பாளராகி செழுநிக ரண்ணாகோப்பி சீர்தொழிலதிபரென்னும் கொழுகொழு பெறாமகனாய்க் குறிவழி மரபு பேணி எழுவல கரசுபோற்ற ஏற்புறு பணிகள் செய்து தழு தழு வென்ன வாங்கு தழைத்தநற் தொழிலதிபமழுவது கொண்டு காலன் மாவுயிர் கவர்ந்தனனோ!*

*வஞ்சமில் நெஞ்சுநின்தன் வார்த்தையிற் கபடமில்லை கொஞ்சுநின் முடுகத்திலாங்கே கனிவொடு புன்னகையும் அஞ்சிடா ஆண்மையுமாய் அறையுபேர் நிழலேயென்ன மிஞ்சுடுங் கடமையோடு மிகையுறு கண்ணியமும் விஞ்சிடுங் கட்டுப்பாடும் வித்துநம் வித்துவத்தின் எஞ்சிடும் மதிபுகழாய் எடுத்தொரு மாலை சூட்ட நெஞ்சினில் வாழ்த்திவெங்கள் நீதிவேள் பாபுகோவே வெஞ்சமர் கொண்டு காலன் வீழ்த்திடவேழம் ~ வீழ்ந்தோ!*

*K. N. சண்முகராசா குடும்பம்*
*"சிவசத்தி" வவுனியா.*

# *கண்ணீர் அஞ்சலி*

## பாபு எங்கு சென்றாய்

*புன்னகைதவழ் வதனம் உன்முகம் ஒளியே வீசும்*
*நெஞ்சையே உருக்கும் வார்த்தை வஞ்சனை இல்லாத உள்ளம்*
*வார்த்தையில் கனிவு கண்டோம் சொல்லிட வார்த்தை இல்லை*
*காத்திடும் பான்மை எல்லாம் பகர்ந்திட முடியாதையா*

*அண்ணாரின் பணிமனையில் அச்சிடும் கூடம் தன்னில்*
*அண்ணலே நீ அமர்ந்து ஆற்றிடும் பணிகள் எம்மை*
*எண்ணவே முடியாதென்று எத்தனை திறமை கண்டோம்*
*வண்ணங்கள் வடிவம் எல்லாம் சரித்திரம் பொறிக்கும் பாபு*

*அச்சாணியாக வாழ்ந்த ஐயனே பாபு நீயும்*
*நிச்சயமாக வந்து திரும்பவும் பணிகள் செய்வாய்*
*அச்சாணி இல்லாத தேர் போல் ஆனது எங்கள் பாவம்*
*அச்சகம் ஒளி இழந்து புலம்புது பாபு இன்று*

*நிச்சயம் உன்னை நம்பி நிறையபணி செய்து நின்றோம்*
*நீதியே இலட்சியமாய் நீதியே எடுத்துரைப்பாய்*
*வாய்மையே உந்தன் பேச்சு பாதகம் இழைக்கவில்லை*
*மாய்கின்றோம் பாபு உன்னை இழந்ததினாலே இன்று*

*திருநகர் கொழும்பு வந்து திறன்மிகு அச்சுக் கூடம்*
*திருமகள் பொலிந்திலங்க திறம்பட பணிகள் ஆற்றி*
*அரும்பெரும் சோதரர்கள் எம்மையும் வளர்த்து நின்றாய்*
*பெரும்புயல் ஒன்றுவீசி சாய்ந்தது நிழல் விருட்சம்*

*மங்கலத் திருமணத்தில் மலர்மாலை சூட்டி வாழ்த்த*
*மங்கள வாழ்த்து பாட ஊழியர் எண்ணி நின்றோம்*
*திங்களும் வான் மறைத்து இருளுமே சூழ்ந்து நிற்க*
*அஞ்சலி செலுத்தி மாலை சூட்டிடும் பாவியானோம்.*

*உன்பெரும் பணிகள் பண்பு உன்னத குணங்கள் எல்லாம்*
*அண்ணலே வான்புகுந்து ஜீஸ் கந்தவேள் அடிபணிந்து*
*நண்ணியே இறைஞ்சி என்றும் பேரின்பம் காண்பாய் பாபு*
*பண்ணிய சேவையெல்லாம் பகருமே உன் பெருமை*

*அன்னாரின் பிரிவால் துயருறும்*
*AICO ஊழியர்கள், ANNA ஊழியர்கள், NTK ஊழியர்கள்*



## பதினாறு திருப்பெயர்கள்



ஓம் சுமுகாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
ஓம் கஜகர்ணகாய நம:
ஓம் லம்போதராய நம:
ஓம் விகடாய நம:
ஓம் விக்னராஜாய நம:
ஓம் கணாதிபதயே நம:
ஓம் தூமகேதவே நம:
ஓம் காணாத்யசஷாய நம:
ஓம் பாலசந்த்ராய நம:
ஓம் கஜானனாய நம:
ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் சூர்ப்பகர்ணாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம:

## காரிய சித்தி மாலை

*திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்*
*காதலால் கூப்புவர்தம் கை.*

*சகல காரியங்களிலும் சித்தி பெற யானை முகனைத் துதித்து இந்தப் பாடலைப் பாடினால் ஒருவர் தான் எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.*

*இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மாலை, மதியம் மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டுநாட்கள் பாடுபவர்கள், நினைத்த காரியம் சித்திக்கும் சதுர்த்தி விரத தினத்தன்று எட்டுமுறை பாடினால் எட்டுச் சித்திகளும் கைகூடும்.*

1. பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன் ?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம்அடைகின்றோம்.

4. மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கும் நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.



6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

7. மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

8. பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன் ?
பாசஅறிவல் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன் ?
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

# தோத்திரம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## பஞ்சபுராணம்

### தேவார பதிகங்கள்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் உனைநாட்பணிந் தேர்த்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறினேன்
நலந்தீங்கலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மந்தறியேன்
உலந்தார் தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேனடி யேனகி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

மங்கையர்க்க கரசிவளவர்கோன் பாவைவரிவளர்கை மடமானி
பங்கையச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும்பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகனால் வேதமும் பொருள்களுமருளி
அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த வாலவாயாவது மதுவே.



அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்
அந்தணர் நாளும் அடிபரவ மங்குள் மதிதவள்
மாடவீதி மருகநிலாவிய மைந்தர் சொல்லால்
செங்கையரால் புனல் செல்வ மல்கும்
சீர்கொள் செங்காட்டம் பிடியதனுள்
கங்குள் விளங்கி ஏந்தியாடும் கணபதீச்சரம் காமுறவே.

## திருவாசகம்

முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தெனெனக்கருளியவாறார் பெறுவாரச்சோவே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர்பளிங்கின்திரண் மணிக்குன்றே
சித்தத்துட் தித்திக் குந்தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பலமாரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந்தானைக்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்குமந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமேயிட மாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சி லம்படி வாழ்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறு முகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



## சரஸ்வதி துதி



வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் ~ வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை ~ தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் ~ துடியிடையும்
அல்லும் பகலும் அனைவரதமுந் துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ ?
சகம்ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே !
சகல கலாவல்லியே ! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே ! 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்திக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே ! 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நாற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே ! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே ?
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே ! 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே ! 6



பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே ! 7

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே ! 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் ?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பாதாம்புயத் தாயே !
சகல கலாவல்லியே ! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற் மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல் கோடியுண்
டேனும் விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுள்தோ
சகல கலாவல்லியே ! 10

முற்றிற்று

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த்திகழ்ந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
07.09.2000 அன்று அமரத்துவம் அடைந்த எமது
குடும்பத்தின் குளவிளக்கு

**அமரர் உயர் திரு. வி. ஸ்ரீஸ்கந்தவேள் (பாபு)**

(MANAGING DIRECTOR - AICO (PVT) LIMITED)

அவர்களின்

மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து
உதவியவர்களுக்கும் இறுதிச்சடங்கிலும், இறுதி
ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும்,
அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும்,
மலர்வளையம் வைத்து அஞ்சலி
செலுத்தியவர்களுக்கும், மற்றும் பல வழிகளில்
உதவிகள் புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டி
சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொண்டு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள்
அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணக்கம்

இங்ஙனம்
**அப்பா, அம்மா,**
**சகோதர, சகோதரிகள்**
**மைத்துனர்மார்.**

Cover Print - AICO (Pvt) Ltd., Colombo -12. Design by : Gnanam